DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 135/2024 |
| Deposition of Witness for | : | P.W. 1 |
| Name | : | **சண்முகசுந்தரம்** |
| Father's Name | : | பாஸ்கரன் |
| Village | : | வேங்கைபட்டி |
| Taluk | : | திருப்பத்துார் |
| Calling | : | விவசாயம் |
| Religion | : | இந்து |
| Age | : | 48/2025 |

**(வழக்கின் எதிரி ஆஜர் )**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 06.01.2025

**முதல் விசாரணை:**

நான் தற்போது வேங்கைப்பட்டியில் வசித்து வருகிறேன், நான் விவசாய வேலை செய்து வருகிறேன், இவ்வழக்கின் ஆஜர் எதிரியை தெரியும். சாட்சி பூரணம் என் மனைவி. சாட்சி சின்னம்மாள் எனது பக்கத்துவீட்டுகாரர். எனக்கு எதிரிக்கும் இடையே நிலம் சம்பந்தமாக பிரச்சனை இருந்து வந்தததது. அதன் காரணமாக எதிரி என்னிடம் அடிக்கடி சண்டை போட்டு வந்தார் கடந்த 07.10.2013 ம் தேதி மதியம் 03.00 மணியளவில் நான் எனது வீட்டில் பால் பீச்சிக்கொண்டிருந்தேன் அப்போது எதிரி அங்கு வந்து வாய் வித்தியாசமாக கெட்ட வார்த்தையால் திட்டி பின்பு கல்லை கொண்டு எனது ஓட்டுவீட்டின் மீது எறிந்தார் மேலும் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று என்னை பார்த்துமிரட்டினார். எதிரி எனது ஓட்டு வீட்டின் மீது கல்லை கொண்டு எறிந்ததில் எனது வீட்டின் ஓடு ஒரு பகுதி சரிந்து விழுந்து சேதமாகிவிட்டது. அதன் பின்பு நான் சிங்கம் புணரி காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன். தற்போது காட்டப்படும் புகார் மனு நான் காவல்நிலையத்தில்

கொடுத்தது தான் அந்த புகார் மனு **அ.சா.ஆ.1** ஆகும். சம்பவத்தில் எதிரி எனது சித்தித சாந்தி என்பவரை காலால் நெஞ்சில் மிதித்தார், எதிரியின் வீடு எனது வீட்டில் இருந்து சுமார் 100 மீ தொலைவில் உள்ளது. ஆஜர் எதிரி எனக்கு அண்ணன் முறையாவார். இச்சம்பவம் எனது மனைவி மற்றும் சின்னம்மாள் ஆகியோருக்கு தெரியும், இவ்வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை :**

சாட்சி சாந்தி எனது சித்தி , சாட்சி பூரணம் எனது மனைவி என்று சொன்னால் சரிதான். எனது சித்தியின் வீடு எனது வீட்டின் அருகே உள்ளது என்று போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். எனது பால்பண்ணைக்கு அதிகமான நபர்கள் பால் வாங்க வருவார்கள் என்றால் சரிதான், அ,சா.ஆ. 1ல் புகாரில் எதிரியும் அவரது சகோதரர் கண்ணனும் எங்கள் வீட்டிற்கு வந்ததாக சொல்லியுள்ளேன் என்று சொன்னால் ஆமாம். போலிசார் விசாரணையில் கண்ணனை எதிரியாகசேர்த்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு தியாகலிங்கம் மகன் கண்ணன் என்பவர் வரவில்லை என்றும் அவரை வழக்கில் சேர்க்கவேண்டும் என நினைத்து புகாரில் சேர்த்து கொடுத்துவிட்டேன் என்று என்னுடைய வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். எனது வீடு கட்டி 30 வருசம் இருக்கும் என்றால் சரிதான். எனது வீட்டின் அருகே சேகர் வீடு உள்ளது என்றால் சரிதான். புது ஓடு மாத்தியதற்கான ரசீதுதோ வேறு ஆவணமோ தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். நான் கண்ணன் மீது பொய்புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. புகாரை யார் எழுதியது என்றால் பொன்விஜயன் ஆகும். அவரை போலிசார் விசாரித்தனர். புகாரை காவல்நிலையத்தில் வைத்து எழுதினேன். சம்பவம் நடந்தாக சொல்லும் தேதியிலே புகார் கொடுத்தேன்.என்னிடம் சம்பவத்தின் போது போ'ன் இல்லை. நான் சொத்து சம்பந்தமாக முன்விரோதம் என்று சொன்ன வழக்கு எண் மற்றும் நீதிமன்றமோ அது சம்பந்தமான எந்த விபரமும் சொல்லவில்லை என்றால் சரிதான். நாங்கள் எல்லோரும் உறவினர்கள் என்றால் சரிதான். நான் சம்பவத்தின் போது பால்பீச்சிகொண்டிருந்தேன் என்பதை போலிசாரிடமோ புகாரிலோ குறிப்பிடவில்லை

என்றால் தற்போது எனக்கு ஞாபகமில்லை. சம்பவத்தின் போது நான் இல்லை என்றாலும் அப்படி ஒரு சம்பவமே நடக்கவில்லை என்றாலும் எனது இருப்பை எங்கும் பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. காயம் பட்ட எனது சித்தியை அரசு மருத்துவமனையில் மெடிக்கல் மெமோவோடு சேர்க்கப்பட்டார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மருத்துவமனையில் இருந்து போலிசாருக்கு தகவல் கொடுத்தனர். நான் எந்த புகைப்படமும் எடுக்கவில்லை. போலிசார் உடைந்த கல் மற்றும் ஓட்டை கைப்பற்றினார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது . புகார் தாமாதமாக கொடுத்தற்கான காரண்த்தை எங்கும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் புகாரிலோ போலிசார் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் அன்று மற்ற சாட்சிகளின் இருப்பை பற்றியோ என்னை பற்றியோ சொல்வில்லை என்றால் ஆமாம், போலிசார் என்னை கேட்கவில்லை என்பதால் சொல்லவில்லை. சட்டப்படி நடந்த சங்கதிகளை சொல்லவேண்டிய கடமை உள்ளது என்றால் சரிதான். சம்பவத்தின் போது யாரும் இல்லை என்றாலும் நானும் இல்லை என்றாலும் சரியல்ல.போலிசார் என்னை சம்பவ நடந்த மறுநாள் விசாரித்தார்கள் .எனது புகாரிலோ போலிசார் விசாரணையில் கல்லின் அளவு குறித்து நான் எதுவும் சொல்லவில்லை என்றால் கல் என்று மட்டும் சொல்லியுள்ளேன். ஓட்டின் சேதமதிப்பினை குறித்து அரசு அலுவலர்களோ மதிப்பீட்டார்களோ மதிப்பீடு செய்யவில்லை என்றால் சரிதான். உண்மையில் சம்பவம் எதுவும் ஏற்பட்டிருந்தால் அது குறித்து சேதம் மதிப்பு குறித்து மதிப்பீடு செய்திருப்பார்கள் என்றும் அப்படி ஒரு சம்பவம் நடக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சொன்ன தேதியில் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரி என்னை திட்டவில்லை என்றாலும் எனது சித்தியை அடிக்கவில்லை என்றாலும் எனது சொத்திற்கு எந்த சேதமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. எதிரி மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 135/2024 |
| Deposition of Witness for | : | P.W. 2 |
| Name | : | **சாந்தி** |
| Father's Name | : | ரவிசந்திரன் |
| Village | : | வேங்கைப்பட்டி |
| Taluk | : | சிங்கம்புணரி |
| Calling | : | விவசாயம் |
| Religion | : | இந்து |
| Age | : | 50/2024 |

**(வழக்கின் எதிரி ஆஜர் .)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 03.01.2025

**முதல் விசாரணை:**

நான் தற்போது வேங்கை பட்டியில் வசித்து வருகிறேன், நான் விவசாய வேலை செய்து வருகிறேன், வழக்கின் ஆஜர் எதிரியை தெரியும் அவர் எனக்கு பங்காளி முறையாவார். அ.சா.1 எனக்கு மகன் ஆவர். சாட்சி பூரணம் எனது மருமகள் ஆவர். நான் எனது மகன் மற்றும் எனது மருமகள் உடன் வேங்கைபட்டியில் வசித்து வருகிறேன், ஆஜர் எதிரிக்கு அ.சா. 1 சண்முகசுந்தரத்திற்கும் இடையே சொத்து சம்பந்தமாக ஏற்கனவே பிரச்சனை இருந்து வந்தது. சுமார் 10 வருடங்களுக்கு முன்பு நான் எனது மகன் அ.சா.1 வுடன் வீட்டில் இருந்தேன். எனது மகன் அ.சா.1 வீடடில் பால் பீச்சிக்கொண்டிருந்தார் அப்போது எதிரி அ.சா.1 ஓட்டு வீட்டின் மீது கல்லை கொண்டு எறிந்தார். மேலும் அசிங்கமாக அ.சா.1 பேசி வீட்டை விட்டு வெளிய வாடா என்று சொன்னார். நான் போய் எதிரியிடம் கேட்டதற்கு கீழே தள்ளி என்னை காலால் நெஞ்சில் மிதித்தார். அதில் எனக்கு வயிற்றில் ஊமைக்காயம் ஏற்பட்டது .எதிரி கல்லை விட்டு எறிந்ததில் அ.சா.1 வீட்டின் 20 ஓடுகள் சேதமாகவிட்டது. அதன்

மதிப்பு ரூ. 300 இருக்கும். நான் காயம் பட்டவுடன் அ.சா.1 என்னை சிங்கம் புணரி அரசு மருத்துவமனையில் சிகிச்சை சேர்த்தார். நான் மருத்துவமனையில் 3 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்து கொண்டேன். போலிசார் இவ்வழக்கு சம்பந்தமாக என்னை மறுநாள் விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை :**

எனது மகன் பெயர் வெங்கடேசன் எனது மகள் பெயர் சிந்து. அ.சா1 என் மச்சான் மகன் என்றால் சரிதான். போலிசார் விசாரணையில் நானும் அந்த வீட்டில் வசிப்பதாக சொல்வில்லை என்றால் சரிதான். அதேபோல் அ.சா.1 பால் பீச்சி கொண்டிருந்ததாக போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். வீ,ட்டின் வெளியில்தான் மாட்டிற்கு பால் கறந்து கொண்டிருந்தார் என்றால் சரிதான், போலிசார் விசாரணையில்வெளிநோயாளியாக சிகிச்சை எடுத்து கொண்டு அன்றே வந்து விட்டேன் என்று சொன்னால் சரிதான். சொத்து சம்பந்தமாக எதிரிக்கும் அ.சா.1 பிரச்சனை இருந்து வந்தது அது சம்பந்தமாக நீதிமன்ற தீர்ப்பு வந்ததால் பிரச்சனை என்று சொல்லிள்ளேன் என்றாலும் அந்த நீதிமன்றத்தை குறித்தோ வழக்கு விபரம் குறித்தோ விபரம் எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான், நானும் மாடு வைத்து வளர்க்கிறேன். நானும் பால் கறவை செய்வேன் . அ,,சா.1 வீட்டின் எதிரே சேகர் வீடு உள்ளது என்றால் சரிதான், சேகர் மனைவி பெயர் அல்லி ஆகும். அரசு மருத்துவமனைக்கு செல்லும் போது மருத்து நமுனா வுடன் சென்றேனா என்றால் இல்லை. போலிசார் விசாரணையில் மற்ற சாட்சிகளின் இருப்பை பற்றியோ நடவடிக்கை பற்றியோ எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. அ,சா.1 வீட்டை சுற்றி வேலி எடுத்து அடப்பு துறப்பான வீடு என்றால் சரிதான். அந்த வீடு சுமார் 40 வருசத்து வீடு என்றால் சரிதான். வீடு கட்டும் போதே ஓட்டு வீடு என்றால் சரிதான்,. அதன் சேத மதிப்பு ரூ.300 என்று உத்சேதமாக சொல்கிறேன் என்றால்சரிதான். அ.சா.1 வீட்டின் மேற்கே பொது ரோடு உள்ளது என்றால் சரிதான். கல்லின் அளவு குறித்து எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். எனக்கு ஏற்பட்ட காயம் மாடு முட்டியதாலும் , பால் கறக்கும் போது உதைப்பதாலும் ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சொன்ன தேதியில் சம்பவம் எதுவும்

நடக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரி என்னை திட்டவில்லை என்றாலும் சரியல்ல. ஓட்டின் சேத மதிப்பு குறித்து அரசு அலுவலர்களோ மதிப்பீட்◌ார்களோ எந்த மதிப்பீடும் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். எதிரிக்கு எதிராக பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

web copy

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 135/2024 |
| Deposition of Witness for | : | P.W. 3 |
| Name | : | **பூரணம்** |
| Husband Name | : | சண்முகசுந்தரம் |
| Village | : | வேங்கைப்பட்டி |
| Taluk | : | சிங்கம் புணரி |
| Calling | : | விவசாயம் |
| Religion | : | இந்து |
| Age | : | 42/2025 |

**(வழக்கின் எதிரி ஆஜர் .)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 03.01.2025

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது வேங்கை பட்டியில் வசித்து வருகிறேன், நான் விவசாய வேலை செய்து வருகிறேன், வழக்கின் ஆஜர் எதிரியை எனக்கு தெரியும் . அ.சா.1 எனது கணவர். அ.சா.2 எனது சின்ன மாமியார். சாட்சி சின்னம்மாள் எனது பக்கத்து வீட்டுகாரர். எங்களுக்கும் எதிரிக்கும் இடையே ஏற்றகனவே சொத்து சம்பந்தமாக பிரச்சனை உள்ளது . நாங்கள் பால்பண்ணை வைத்து பால்வியாபாரம்செய்து வருகிறோம். சுமார் 11 வருடங்களுக்கு முன்பு மதியம் சுமார் 03.30 மணியளவில் நானும் எனது கணவரும் பால் கறந்து கொண்டிருந்ததோம். அப்போது எதிரி எங்களுது வீட்டிற்குள் வந்து கல்லை கொண்டு எங்களது ஓட்டு வீட்டில் எறிந்தார் எங்கள் வீடடின் 20 ஓடுகள் சேதமானது. பின்பு எனது சின்னமாமியாள் சாந்தி வந்து எதிரியிடம் கேட்டபோது எதிரி அவரை கீழே தள்ளி காலால் மிதித்தார். அதன் பிறகு எனது கணவர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார் பின்பு காயம் பட்ட அ.சா.2

எனது கணவர் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை :**

எனது வீடு சுமார் அரை ஏக்கர் சுற்றளவில் வேலி எடுத்து அடப்பு துறப்பான வீடுதான் என்றால்சரிதான். சின்னம்மாள் வீடு தள்ளி உள்ளது என்றால் சரிதான் . சின்னம்மாள் வீடு சுமார் 500 மீ தூரம் இருக்குமா என்றால் இருக்கும். பால் வியாபாரம்செய்து வருகிறோம். பால் வாங்குவதற்கு பொது மக்கள் வருவார்கள். அ.சா. 1 எனது கணவர். அ.சா.2 எனது மாமியார் என்றால் சரிதான். போலிசார் விசாரணையில் எதிரி வீட்டிறகுள் வந்து பிரச்சனை செய்தாக சொல்லவில்லை . நான் புகார் கொடுக்க சொல்லவில்லை .சொத்து சம்பந்தமாக எதிரிக்கும் அ.சா.1 க்கு பிரச்சனை இருந்து வந்தது அது சம்பந்தமாக நீதிமன்ற தீர்ப்பு வந்ததால் பிரச்சனை என்று சொல்லிள்ளேன் என்றாலும் அந்த நீதிமன்றத்தை குறித்தோ வழக்கு விபரம் குறித்தோ விபரம் எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான்.அ.சா.1 எனது கணவர் என்பதால்அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அந்த வீடு 40 வருசம் பழைய வீடு என்றால் சரிதான். நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சொன்ன தேதியில் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரி எனது கணவரை திட்டவில்லை என்றாலும் மிரட்டவும் இலலை என்றாலு் சொத்துக்களுக்கு எதுவும் சேதம் ஏற்படுத்தவில்லை என்றாலும் சரியல்ல. ஓட்டின் சேத மதிப்பு குறித்து அரசு அலுவலர்களோ மதிப்பீட்ார்கேளோ எந்த மதிப்பீ்டும் செய்யவி்ல்லை என்று சொன்னால் சரிதான். நடக்காத சம்பவத்திற்்கு அ.சா.1 எனது கணவர் என்பதால் எதிரிக்கு எதிராக பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Ecourts